தமிழீழத் தேசியப் படைப்புக்களுக்கான தணிக்கைக் குழுமம்
தமிழீழ அரசியல்துறை
Thamil Eelam National Creative Content Censor Committee - (TEN4C)

TAT/TEN4C/20260101/004

2026/01/01

"தமிழ்நாட்டில் தமிழ்த் தேசியத்தைப் புறக்கணிக்கின்றதா தென்னிந்தியத் திரை உலகம்"

கடந்த பலநூற்றாண்டுகளாக தமிழர் வரலாற்றினைச் சிதைப்பதற்கு வடமாநிலத்தவர்களின் தலையீடுகளால் பல வகைப்பட்ட வரலாற்று அழிப்பு நடவடிக்கைகள் தொலைநோக்குத் திட்டமாக தமிழக மண்ணில் அரங்கேற்றப்பட்டு வருகின்றது. அந்த வகையில் நவீன தொழில்நுட்ப வசதிகளோடு கூடிய திரைப்படங்கள் வாயிலாகவும் தமிழ்த்தேசிய விடுதலைப் போராட்டத்தின் வரலாற்று நியாயாதிக்கத்தை உலகிற்கு வெளியிடாத வண்ணம் மறைமுகமாக தடை செய்து வருகின்றனர். இதன் தொடர்ச்சியாக தமிழர்களின் எழுச்சிமிகு விடுதலைப்போராட்டத்தை இழிவுபடுத்தும் வகையில்,குறிப்பாக பேமிலி மேன்***(Family man),*** என்ற வலைத்தொடர், மெட்ராஸ் கபே,***(Madras cafe)*** முதல், ஒற்றைப்பனைமரம் மற்றும் சமீபத்தில் வெளியிடப்பட்ட ஜாட்***(JATT)*** போன்ற திரைப்படம் வரை, திரைப்படங்களை தயாரித்து, திரையரங்குகளில் வெளியிட தமிழரல்லாதவர்களும், வடமாநிலத்தவர்களும் முனைப்புடன் செயற்பட்டு வருகின்றனர்.

தமிழ்நாட்டுத் தேசியவாதிகளின் உணர்வுகளால் உந்தப்பட்டு பல இளம் இயக்குனர்கள் தமிழ்த் தேசியக் கருத்துக்களை மக்களுக்கு எடுத்துச் சொல்லும் வகையில் உருவாக்கும் திரைப்படங்களுக்கு இந்தியத் திரைப்படத் தணிக்கைக்குழுமம் சரியான அனுமதி கொடுக்காமல் பல தடைகளை விதிப்பது யாவரும் அறிந்ததே. இந்தியத் திரைப்பட தணிக்கைக்குழுமம் அனுமதி வழங்கிய ***(V House)*** வெளியீட்டில், இயக்குனர் திரு.தி.கிட்டு அவர்களின் இயக்கத்தில் உருவாகிய திரைப்படமான சல்லியர்கள் திரைப் படத்தை, திரையரங்குகளில் வெளியிட நீண்டகாலம் இழுத்தடித்து, தமிழ்நாட்டில் அண்ணளவாக ஆயிரத்திற்கும் மேற்பட்ட திரையரங்குகள் இருக்கும் போது, இத்திரைப்பட வெளியீட்டாளரால், கோரப்பட்ட திரையரங்குகளை விட மிகக் குறைவான திரையரங்குகளை**(27)** மட்டுமே ஒதுக்கி, இத்திரைப்படத்தினை மக்களின் பார்வைக்கு காட்சிப்படுத்தாவண்ணம் திட்டமிட்டு மறைமுகமாகத் தடுத்ததில்***(PVR)***சினிமாவிற்கு முக்கிய பங்கு உள்ளதென அறிய முடிகிறது. மேலும் சர்வதேச விதிகளுக்கு அமைவாக எடுக்கப்பட்ட ஒரு இனத்தின் கருத்தியல் உரிமையை வெளியிட மறுக்கப்பட்டதாகவே கருதுகின்றோம். சல்லியர்கள் திரைப் படமானது தமிழீழத் தேசிய விடுதலைப் போராட்டத்தில் முக்கிய பங்காற்றும் மருத்துவப் போராளிகளின், தியாகத்தையும், மக்களின் தியாகத்தினையும், சித்தரிக்கும் வகையில் தயாரிக்கப்பட்டுள்ளது.

இதில் காட்சிப் படுத்தப்பட்டுள்ள சம்பவங்கள் கற்பனையல்ல உண்மை நிகழ்வுகளை அடிப்படையாக கொண்டது. மருத்துவ போராளிகள் தம் உயிரையும் துச்சமென மதித்து செயல்படுபவர்கள். சர்வதேச போர்விதிகளுக்கமைவாக எதிரிப்படை வீரனையும் மனிதாபிமானமாக நடாத்தும் தன்மை கொண்டவர்கள். இதனை கருத்தில் கொண்டு இத்திரைப்படம் தயாரிக்கப்பட்டதால், விடுதலைப் போராளிகளினதும், தமிழீழ மக்களினதும் விடுதலைக்கான அறம்சார்ந்த அர்ப்பணிப்புக்களை உலக மக்களுக்குச் சென்றடையா வண்ணம் தடுத்து, தமிழீழ விடுதலைப்போராட்டத்தின் நியாயத்தையும், தியாகத்தையும் வெளிக்காட்டுவதை தென்னிந்திய திரையுலகில் உள்ள தமிழின விரோதிகள் முனைவதாகவே நாம் கருதுகின்றோம். இவ்வாறான தொடர் பாதகச் செயற்பாடுகளை தடுப்பதற்கு தமிழக தமிழ்த்தேசிய உணர்வாளர்கள் அனைவரும் ஒற்றுமையாக இணைந்து செயற்பட வேண்டுமென உரிமையுடன் கேட்டுக்கொள்கின்றோம். இத்திரைப்படம் வெளியிடும் நாளை ஆவலுடன் எதிர்பார்த்திருந்த தமிழர்களின் மனங்களில் தென்னிந்திய திரை உலகின் மீது அவநம்பிக்கையை ஏற்படுத்தியுள்ளது.

இவ்வாறான தமிழ்த் தேசிய விரோத நடவடிக்கையில் ஈடுபடும் திரையுலகில் மறைந்துள்ள நாசகார சக்திகளை, தமிழீழ அரசியல்துறையின் தமிழீழத் தேசியப்படைப்புக்களுக்கான தணிக்கைக் குழுமமாகிய நாம் வன்மையாகக் கண்டிக்கின்றோம். இவ்வாறான செயற்பாடுகள் தொடருமிடத்தில், உங்களின் ஆதரவோடு வெளியிடப்படும் திரைப்படங்களை இனம் கண்டு புலம்பெயர் தேசத்துமக்களால் புறக்கணிக்க நேரிடும் என்பதையும் தெரிவித்துக் கொள்கின்றோம்!

"தமிழரின் தாகம் தமிழீழத் தாயகம்"

திரு.ம. கிருபாகரன்
பணிப்பாளர்
தமிழீழ தேசியப் படைப்புக்களுக்கான தணிக்கைக் குழுமம்

திரு.க. அருளன்
ஒருங்கிணைப்பாளர்
தமிழீழ தேசியப் படைப்புக்களுக்கான தணிக்கைக் குழுமம்

WEB: WWW.THAMILEELAARASIYALTHURAI.ORG EMAIL: TENCCCCTAT@GMAIL.COM MOB: 0044 777 0028 168